# ஜாமக்காரன்
# JAMAKKARAN

(**ஜாமக்காரனில்**) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 9** **Reg No.TNBIL/2016/70171** **ISSUE - 2**

**FEBRURY 2025 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜாமக்காரன்

JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே ! வாழ்த்துகிறேன்

இந்த மாதம் நம் சிந்தனைக்கு கீழே உள்ள துண்டு பிரதியின் சிறு பகுதியை மட்டும் வெளியிடுகிறேன். இதின் சிறப்பு என்னவென்றால் இந்த விலை உயர்ந்த அட்டையில் **வெளியிடப்பட்ட இந்த பிரதி** பல வருடங்களுக்குமுன் நான் இலங்கை சென்றபோது **பைபில் சொசைட்டி கட்டிடத்துக்கு** அருகே உள்ள கெஸ்ட் ஹவுசில் தங்க வைக்கப்பட்டேன். பகல் நேரத்தில் அருகேயுள்ள பைபிள் சொசைட்டிக்கு பார்வையிட சென்ற போது இந்த துண்டு பிரதியை கண்டேன். இதில் உள்ள செய்தி கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும் என்று அங்கு உள்ளவர்களிடம் விசாரித்து எடுத்து வந்தேன். இதில் விசேஷம் என்னவென்றால் வெளியிட்டவர்களின் விலாசம் இதில் இல்லை.

கடைசி பக்கத்தில் நீங்கள் மேல் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள எண்ணாகமம் 33:3 என்று மட்டும் எழுதியுள்ளது. இந்த வசனத்துக்கும் விவரங்களுக்கும் சம்பந்தமேயில்லை. ஆனால் என்ன நோக்கத்தில் இந்த வசனம் கொடுக்கபட்டதோ தெரியவில்லை. மற்றவர்களாயிருந்தால் இந்த துண்டு பிரதி **அதிக விலையில் அச்சடிக்க செலவானது.** ஊங்ளால் இயன்ற **பண உதவியை** தாருங்கள் என்று எழுதி தங்கள் **வங்கி கணக்கில்** பணம் அனுப்ப உள்ள விவரங்களை வெளியிட்டிருப்பார்கள். இந்த துண்டு பிரதியின் நோக்கம் இப்போதைய கிறிஸ்தவர்கள் **மனம் திரும்பவேண்டும்** என்ற பெரிய நோக்கத்தோடு **வெளியிடுபவர்களின் பெயர்கள் வெளியே வராமல்** இயேசு கிறிஸ்துவின் நாமம் மட்டும் மகிமைப்பட வேண்டும் என்ற அற்புதமான **உயர்ந்த நோக்கத்தோடு** வெயிட்டிருக்கிறார்கள். கர்த்தர் தாமே இறதற்கு சம்பந்தப்பட்டவர்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**- Dr.Pushparaj**

**FEBRUARY- 2025**

பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப்பிடித்துக்கொள்ளுகிறார்கள். (மத்தேயு 11:12)

# உங்களுக்கு தெரியுமா... ???

**பரலோகத்திலும் நரகத்திலும்** நம் **ஆத்துமாவுக்கு** சாவு **என்பதே இல்லை. பரலோகம்** என்பது மகிமையிலும் **மகிமை... நரகம்** என்பது கொடுமையிலும் **கொடுமை.** பரலோகமும், நரகமும் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று பரிசுத்த வேதாகமம் தெளிவாக சொல்லுகிறது. **நரகம்** என்பது காரிருள், அவியாத அக்கினி, எரிநரகம் அக்கினிக்கடல் மற்றும் பாதாளம் (மத்தேயு 5:22 & 18:8, வெளி. 21:8 & 19:20) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏதோ மாயா ஜாலத்தை போலிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இல்லை. அன்பார்ந்தவர்களே! இது முழுக்க முழுக்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சத்திய வார்த்தைகள் ஆகும்.

**நரகத்தில்** ஏதோ ஓரிரு நாளில் **இந்த தண்டணை** முடியும் என்று நினைக்கிறீர்களா? இல்லை,,,! பரிசுத்த வேதாகமம் இதை **நித்திய மரணம் என்று** சொல்லுகிறது, இதில் போகிறவர்கள் யுகயுகமாக இந்த **நரகத்தில்தான்** இருக்க வேண்டும். கொஞ்ச காலம் மாத்திரமே வாழும் இந்த உலகத்தில் எப்படியெல்லாம் பிரயாசப்படுகிறோம் ? ஆனால் நித்திய நித்திய காலமாய் அனுபவிக்கப்போகும் தண்டனைக்குத் **தப்பித்துக்கொள்ள** பிரயாசப்படுகிறோமா?

ஏமாற்றத்துக்குள் ஆக்கபோகும் காரியங்கள் செய்வதால் தப்பிக்கொள்ள முடியுமா? நியாயத்தீர்ப்பு நாளில் அவருக்கு முன்பாக நிற்கும்போது உலகத்திலிருந்த நாட்களில் **கிறிஸ்தவ பெயர்** வைத்திருந்தேன். நான் **ஆலயத்திற்கு** ஒழுங்காகச் சென்றேன். மெகா **சபையில்** அங்கத்தினராய் இருந்தேன். **பரவசப் பாடல்களைப் பாடி** உம்மைத் துதித்தேன். உற்சாகமூட்டும் உம் வார்த்தைகளைக் கேட்டேன். **அபிஷேகத்தில் நிறைந்து அந்நிய பாஷையில்** பேசினேன். **உண்மையாய் மனந்திரும்பாமல்** பலமணி நேரம் **ஜெபம் செய்தேன்.** ஆடை அலங்காரம் ஆபரங்களைத் **ஆண்டவருக்காக துறந்தேன். ஆலயங்களைக்** கட்டினேன். ஊழியர்களுக்கு உதவி செய்தேன். ஊழியம் செய்தேன். **பிரபல ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்தேன், பாடல் குழுவிலிருந்தேன்.** இசை

வாசித்தேன், செயற்குழுவில் இருந்தேன். (Committee member) **ஞாயிறு பள்ளி** (Sunday School) நடத்தினேன். **சபையில் உயர் பதவிலிருந்தேன்**. (மத்தேயு 7:22 & 23) **தான தர்மங்கள்** செய்தேன். **இஸ்ரவேல்** புனித பயணம் சென்றேன் என்று சொல்லுவதெல்லாம் உங்களை **கொடூர நரக தண்டனையிலிருந்து தப்பிவிக்காது.**

அப்படியென்றால் **என்னத்தான் செய்யவேண்டும்** என்று கேட்கிறீர்களா? இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் -- **மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது. (மத்தேயு 4:17)** உண்மையாய் **மனந்திரும்பி** தேவனுக்கு **ஏற்ற கனிகொடுக்கிற** பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, பிதாவின் விருப்பத்தின்படி செய்ய வேண்டும். அவருடைய **கற்பனைகள்** யாவையும் கைக்கொள்ள வேண்டும். (மத்தேயு 7:21 & 28:19) அந்தோ பரிதாபம் இதை இன்றைய கிறிஸ்தவம் மறந்தே போய்விட்டது.

உங்களைத் **தற்பரிசோதனை** செய்து பாருங்கள் **பின்வரும் பக்கத்தில்** கொடுக்கப்பட்ட **காரியங்கள்** உங்களிடத்தில் காணப்படுகிறதா? இதிலுள்ள காரியங்கள் உங்களிடத்தில் **காணப்படும் பட்சத்தில்** நித்திய நித்திய காலமாய் ஆண்டவரோடு வாழும்படியாய் உருவாக்கப்பட்டிருக்கிற **பரலோகத்தில்** நீங்கள் இடம்பெற முடியாது. தள்ளப்பட்ட தூதர்களுக்காக (சாத்தானின் கூட்டம்) ஆண்டவரால் உருவாக்கப்பட்ட **நரகத்தில் நீங்கள்** இடம் பெறுவது உறுதி... இது நிச்சயம் . **அதுவே சத்தியம்.**

பயப்படாதீர்கள்...! இதை வாசிக்கும் இந்த வேளையிலும் **நீங்கள் உயிரோடுதான் இருக்கிறீர்கள்** என்பதை எண்ணிக்கொள்ளுங்கள். இன்னமும் ஆண்டவர் உங்களுக்கு **ஒரு வாய்ப்பைத்** தருகிறார். உடனே ஆண்டவரிடத்தில் **உங்கள் பாவங்களை** அறிக்கையிட்டு **மனந்திரும்பி,** இந்த **நியாயத்தீர்ப்பு நாளில் உங்கள் முன் கொண்டுவரப்போகும் காரியங்களான இவை யாவும் உங்கள் சிந்தனைகளில் இருந்து அழிக்கப்பட வேண்டியவை.**

**அன்பு** இல்லாமை, சகோதர, சகோதரி **அன்பு இலலாமை** தன்னைப்போல் பிறனை நேசிக்காமை, **பெற்றோரிடம் அன்பு இல்லாமை**, கணவனை - மனைவியை **நேசிக்காமை,** பிள்ளைகளிடம் அன்பு இல்லாமை, சத்துருக்களை நேசிக்காமை, சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்காமை, மார்க்க பேதங்கள், **வாக்குவாதங்கள்,** வைராக்கியங்கள், **வன்மங்கள்,** மதிகேடு, குரோதம், **கோபங்கள்,** சண்டைகள், **பிரிவினைகள்,** பொறாமைகள், **பகைகள்,** கொலை, மாய்மாலம், பெருமைகள், ஆவிக்குரிய பெருமை, தாழ்மையின்மை,

உதாசீனம், வன்கண், அகந்தை, வீம்பு, துரோகம், புறங்கூறுதல், அவதூறு பண்ணுதல், பொய்கள், பொய் சாட்சி, கபடு, வஞ்சகம், **திருட்டு,** துணிகரமான பாவங்கள், வேசித்தனம், **ஆண்புணர்ச்சி,** சுயபுணர்ச்சி, **லௌகீக இச்சைகள்,** களியாட்டுகள், **ஜாதிவெறி,** மதுப்பழக்கம், பொல்லாத சிந்தனைகள், பொருளாசை, **பண ஆசை,** உதாரத்துவம் இல்லாமை (கஞ்சத்தனம்) **லஞ்சம் வாங்குதல்,** லஞ்சம் கொடுத்தல், கடன் வாங்குதல், கடன் திருப்பி கொடுக்காமை, போஜனப் பிரியனாயிருத்தல், விக்கிரக ஆராதனை, சுவிசேஷம் **அறிவிக்காமை, கள்ள தீர்க்கதரிசனம்,** தீமைக்கு நன்மை செய்யாமை, சுயத்தை வெறுக்காமை, பில்லி சூன்யம், கீழ்ப்படியாமை, சிறுபிள்ளைபோல மாறாமை, (இராயனுடைய) **வரி செலுத்தாமை,** குடும்பத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தாமை, **தற்கொலையின் எண்ணங்கள்** காரியங்களிலிருந்து விடுபட ஜெபியுங்கள். **தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்.** அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ **இரக்கம் பெறுவான்.** (நீதிமொழிகள் 28:13, 1 யோவான் 1:7,8) இதற்கு **பரிசுத்த ஆவியானவர்** நிச்சயமாகவே உங்களுக்கு உதவி செய்வார். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், **நியாயத்தீர்ப்பைக்குறித்தும்** உலகத்ததைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) நீங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட முயற்சி செய்யும் பட்சத்தில் ஆண்டவராகிய இயேசு உங்களை பாவ வாழ்க்கையிலிருந்து பூரணமாய் விடுதலையாக்கி, பாவத்தின்மேல் **ஜெயம்பெற செய்து.** பரிசுத்த வாழ்வைத் தந்து உங்களை **பரலோகம் கொண்டு செல்வது** உறுதி... உறுதி... உறுதி...

எச்சரிக்கை... நீங்கள் இந்த உலகத்தில் உயிரோடு இருக்கும் நாட்களில் உங்கள் ஆயுள் ஒவ்வொரு நாளும் **குறைந்தது கொண்டிருக்கிறதை** நினைவுபடுத்துகிறோம்.. தயவு **செய்து மனந்திரும்புங்கள்.**

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே !

அதி சீக்கிரத்தில் இராஜாதி இராஜாவாக **வரப்போகிற** இயேசுக் கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தப்படுங்கள்! ஒருவேளை நீங்கள் இதையேதான் இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என் நினைக்கலாம். உலகத்தில் நடக்கும் சம்பவங்கள் ஆண்டவரின் வருகை அதி சீக்கிரம் என்பதை உறுதிப்படுத்துகிறது. (மத். 24) நாம் அனைவரும் **ஒரு மனிதனின் ஆளுகைக்குள் கொண்டு** செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து விடாதீர்கள். இது தொடர்பான காரியங்கள் அவர் வேதத்தில் சொன்னபடியே அதிவேகமாய் **நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.**

ஆம், பிரியமானவர்களே! அவர் சாயலில் உங்களை படைத்ததின் நிமித்தமாகவும்,. அவர் உங்கள் மீது வைத்த மகா அன்பின் நிமித்தமாகவும், நியாயத்தீர்ப்பின் தண்டனைக்கு தப்பித்துக்கொள்ளவும், உங்களை நித்திய இராஜ்ஜீயத்தில் சேர்த்துக்கொள்ளவும் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் (2 பேதுரு 3:9)

**நோவா காலத்தில்** நடந்தது போலவே, **வெள்ளம் வந்து வாரிக்கொண்டு போகும் மட்டும்** உணராது இருந்தவர்களைப் போல, நீங்களும் இருந்து விடாதீர்கள்,,,! அதைப் போலுள்ள கூட்டத்தில் சேர்ந்தும் விடாதீர்கள்...! (மத்தேயு 24:37-39) **அனலுமில்லாமல், குளிருமில்லாமல்** வெதுவெதுப்பாய் இருக்கும் **சபையை** ஆண்டவர் **வாந்தி பண்ணிப்போடுவார்**. (வெளி 3:16) அழைக்கப்பட்டவர்கள் அநேகர், ஆனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களோ சிலர். (இடுக்கமான வாசலை கண்டு பிடித்தவர்கள்) (மத்தேயு 20:16 & 7:13) இந்த சிலர் என்ற கூட்டத்தில் நீங்களும் நீங்கள் நேசிக்கும் உங்கள் குடும்பத்தாரும்,உங்கள் நண்பர்களும் இடம் பெற வேண்டாமா)

## பிரியமாணவர்களே...! நினைவில் வையுங்கள்...!

1) பாவங்களிலிருந்து உண்மையாய் மனந்திரும்புங்கள்.

2) வேதத்தை தியானித்து அதன்படி செயல்படுங்கள்.

3) பரிசுத்தமாய் வாழுங்கள்

4) இடைவிடாமல் கருத்தாய் ஜெபம் பண்ணுங்கள்

5) ஒருவரோடு ஒருவர் அன்புடன் வாழுங்கள்

6) விசுவாச மக்களோடு தாராளமாய் ஐக்கியப்படுங்கள்

7) தேவன் தந்த தாலந்துகளை உத்தமமாய் பயன்படுத்துங்கள்

8) எளியவர்களுக்கு உதாரத்துவமாய் உதவுங்கள்

9) பாடுகளை பொறுமையுடன் சகித்திடுங்கள்

10) கிறிஸ்வுக்காய் தைரியமாய் சாட்சி பகருங்கள்.

சிந்தியுங்கள் ... உடனே செயல் படுங்கள்

அவருடைய பரிசுத்த மணவாட்டியாய், அவர் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க இன்றே ஆயத்தப்படுங்கள்...

# சுவிசேஷத்தை அறிந்தவர்கள்...
# அறிவிப்பதற்கு வெட்கப்படுவதில்லை

# அறிவிப்பதினால் வெட்கப்பட்டு போவதுமில்லை



அன்பார்ந்தவர்களே,

நீங்கள் இயேசுவை அறிந்தவர்களா? இதுவே முதல் கேள்வி. இயேசுவை அறிதல் என்பது **அறிவு** சார்ந்தது அல்ல. **இதயம்** சார்ந்தது.

கணவன் – மனைவி என்ற அமைப்பில் ஒருவரை **ஒருவர் அறிதல் அறிவினால்** அல்ல. **இதயம் பேசுவதினால்,** இதயம் ஒருவரை ஒருவர்அறியும்போது தம்பதிகள் நடுவில் அன்பு அளவிக்கு மிஞ்சி போகும்! ஒரு மைல் அல்ல பல மைல்கள் செல்வதும் சொல்லாமலே நடக்கும்!

யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்ற யோவான் 21:15, 16,17 ஆகிய வசனங்களில் **அன்பு, நேசம்** என்று வரும் அனைத்தும் **இதயம் சார்ந்ததே?** இயேசுவின் மேல் **இதயம் சார்ந்த அன்பு** இருந்தால் இயேசுவின்மேல் அளவு கடந்த அன்பும் பொங்கும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் அந்த அன்பின் உறவுக்குள் வந்தவர்கள் **அளவுக்கு மிஞ்சி இயேசுவை நேசிப்பார்கள்** சேவிப்பார்கள் ! இடைவிடாமல் இயேசுவிடம் **பேசிக்கொண்டே இருப்பார்கள்.** ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்துக்கொண்டே

இருப்பார்கள். **அவருடைய வசனத்தையே** தியானித்துக்கொண்டு இருப்பார்கள். **சமயம்** வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் **இயேசுவை அறிவிக்கிறவர்களாவே** இருப்பார்கள். சுவிசேஷத்தை குறித்து அவர்கள் வெட்கப்படுவதே இல்லை!

ஒருவர்கூட விடாமல் இயேசு என்ற நாமத்தை கேட்கட்டும், விசுவாசிக்கட்டும், நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கட்டும் என்பதே அவர்கள் இதய வாஞ்சையாக இருக்கும். அதற்கு காரணம் **அவர்கள் நேசம் இதயம் சார்ந்தது.** அவர்கள் **மரணத்துக்கு** ஒப்புக்விக்கப்பட்டவர்களை விடுவிக்கும் வீரர்களாக **கொலையுண்ண** போகிறவர்களை காப்பாற்றும் செய்தியாளர்களாக இருப்பார்கள்.

பிரியமானவர்களே,

***இயேசுவை பகிரங்கப்படுத்த வெட்கப்படுகிறவர்கள் யார் ?***

தங்கள் **அந்தரங்க ஜீவியத்தில்** இயேசுவின் பாதத்தில் தங்காதவர்களே!

***இயேசுவை பறைசாற்ற வாய் கூசுகிறவர்கள் யார்?***

மனசாட்சியினால் குத்தப்பட்டுக்கொண்டே இருப்பவர்களே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நாம் செய்த சகல பாவங்களையும் கழுவி நம்மை சுத்தமாக்கும் பொழுது நாம் சத்தமாக சொல்வது **இயேசுவின் நாமத்தையே !** இயேசுவை மனமாற நேசிப்பவர்கள் யார் ? தங்கள் பாவங்களை மன்னிக்கப்பட்டது என்ற அவர்கள் வெட்கப்படுவதே இல்லை.! இயேசுவின் தாங்கள் பெற்ற நன்மைகளை **மறைக்கவே** மாட்டார்கள்.

உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்து வைக்கவில்லை. உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையும் சொல்லியிருக்கிறேன். உமது கிருபையையும் உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியாதபடிக்கு நான் ஒளித்துக்வைக்கவில்லை. சங்.40:10

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் இதயத்தில் பிரவேசிக்க கண்டவர்கள் அவரை அடைத்து வைப்பது எப்படி? தங்கள் வாய்களுக்கு பூட்டுப் போடுவது எப்படி? வெட்கப்படுவது எப்படி ? வாயார பொய் சொல்ல வெட்கப்படாத இந்த உலகில் சத்தியத்தை அறிந்தவர்கள், சத்தியபரனை நேசிக்கிறவர்கள் மனதார இயேசுவை அறிக்கை செய்ய வெட்கப்படுவது எப்படி?

எந்தெந்த பாட்டுகளையோ பாடுவதற்கு உலகம் வெட்கப்படுவதில்லையே தங்கள் நாவில் புதுப்பாடல் பெற்றவர்கள் **இயேசுவுக்கு துதி பாடல்கள்** பாடுவதற்கு வெட்கப்படுவது எப்படி ?

புழுபுழுத்து சாகப்போகும் மனிதனின் சத்தத்தைக் கேட்டு இது மனித சத்தம் அல்ல, தேவ சத்தம் என்று முக ஸ்துதி செய்ய அவர்கள் வெட்கப்படவில்லையே, சீனாய் மலையின் சத்தத்தைக் கல்வாரி மலையில் கேட்டவர்கள் காணாமல் போன ஆடுகள் மேய்ப்பனில் குரலை கேட்கட்டும் என்று உறைப்பதற்கு வெட்கப்டுவது எப்படி?

மனதைக் கறைப்படுத்தும் கற்பனை கதைகளை படங்களை புத்தகமாக்கி கடை கடையாக விற்பனை செய்ய மனிதர் வெட்கப்படவில்லையே. மனிதனின் மனதை மாற்றும் பரிசுத்த வேதாகமத்தை கூடை, கூடையாகச் சுமந்து வீடு வீடாக, தெரு தெருவாக, கிராமம் கிராமமாகத் திரிந்து விநியோகிக்க விசுவாசிகள் வெட்கப்படுவது எப்படி ?

தாகோன் திரும்ப திரும்ப தலைகீழாக விழுந்தாலும் தூக்கி தூக்கி நிறுத்தி வைத்து அதன்முன் சாஷ்டாங்கமாய் விழுவதற்கு அவர்கள் வெட்கப்படவில்லையே ! மனிதர் அனைவரும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு சி**லுவையில் தம் தலை சாய்ந்த இரட்சகரை உயிர்த்தெழுந்த ஆண்டவரை** நேசிக்கிறவர்கள் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு **வெட்கப்டுவது எப்படி ?**

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து நான் வெட்கப்படேன் (ரோமர் 1:16) என்ற பரிசுத்த பவுலின் வரிசையில் இணைந்தவர்களில் நீங்களும் ஒருவரா?

பொய்யில் மிதக்கும் ஓர் உலகில் மெய்யானவரைக் கூறுகிறவர்களில் நீங்களும் ஒருவரா? என் வாய் நாள் தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும சொல்லும். அவைகளின் தொகையை நான் அறியேன். (சங். 71:15) என்ற லட்சோப லட்ச விசுவாசிகளில் நீங்களும் ஒருவரா?

என் விலங்கைக் குறித்து **ஒநேசிமு** வெட்கப்படவில்லை (2 தீமோ 1:16) என்று பரி பவுல் **ஒநேசிமுவைப்** பற்றிக் கூறுவதுபோல் சுவிசே ஊழியர்களின் துன்பங்களில், தேவைகளில் தயங்காமல் பயப்படாமல் வெட்கப்படாமல் பங்கெடுக்கும் கை கொடுக்கும் ஒரு கூட்டம் விசுவாசிகளில் நீங்களும் ஒருவரா?

ஆம் என்பீர்களாகில் ஒன்று கூறவிரும்புகிறேன். நீங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதேயில்லை.

கர்த்தாராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பறைசாற்றுகிறவர்கள் கர்த்தருடைய ஜனம் அல்லவா? **என் ஜனம் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை** (யோவேல் 2:26) என்பது அவர்களுக்கு சொந்தமானது அல்லவா ! அவர்கள் தனிப்பட்ட வாழ்வில் குடும்ப ஜீவியத்தில் பொருளாதாரத்தில் எத்தனை உபத்திரவங்கள் வந்தாலும் அவர்கள் வெட்கப்பட்டுப்போவதே இல்லை !

பாவங்கள் அநாகரிகங்கள் என்பது மலிந்துபோன இந்த உலகில் மகா பரிசுத்தரைக் குறித்து அறிவிக்க சற்றும் வெட்கப்படாத கூச்சப்படாதவர்களில் நீங்களும் ஒருவர் என்றால் இந்த உலகில் நீங்கள் வெட்கப்பட்டுத் போவதே இல்லை? ஓர் நாள் இந்த உலகை விட்டு சாவின் பள்ளத்தாக்கை கடந்துசெல்லும்போது அவர்கள் வெட்கப்பட்டுப்போவதே இல்லை!

பின்னொரு நாள் மகாராஜா திரும்ப வருவார். ஆம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயும் வெட்கப்பட்டுப் போவதே இல்லை! (மாற்கு 8:38).

பிரியமானவர்களே உலகில் உயிரோடு இருக்கும் இன்று இயேசுவின் சுவிசேஷ செய்தியை எவ்வளவாய்ப் உயர்த்திக் கூறுகிறீர்களோ அவ்வளவாய் உங்கள் பெயர் பரலோகத்தில் உயர்த்தி வாசிக்கப்படும்.

நீங்கள் இம்மையிலும் மறுமையிலும், எதிலும் எவரிடமும் வெட்கப்பட்டுப் போவதே இல்லை (மத்தேயு 10:32) எனவே அன்று அகிரிப்பா ராஜாவுக்கு முன் பரி பவுல் பயப்படாமல் வெட்கப்படாமல் இயேசுவின் சுவசேஷத்தை ஒலிபரப்பினாரே, நீங்களும் எந்த மனிதனுக்கும் பயப்படாமலும் வெட்கப்படாமலும் இயேசுவை வெளிப்படுத்துங்கள்!

நான் உம்முடைய சாட்சியை குறித்து ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கபபடாமல் பேசுவேன் (சங். 119:46) என்ற தாவீது ராஜாவைப்போல இயேசுவின் சுவிசேஷத்தை உயர்த்தி கூறுங்கள் ! அப்பொழுது இரட்சிக்கப்படுகிறவர்கள் **அனுதினமும் சபையில்** சேர்க்கப்படுவார்கள். **குளங்கள் திருமுழுக்குத்** தொட்டிகளாகும்! **நதிகள்** யோர்தான் நதிகளாகும்! உங்கள் நிமித்தம் நித்தமும் **ஜீவ புஸ்தகத்தில்** பல பக்கங்கள் நிரம்பும்! பரலோகத்தில் **தேவ தூதர்கள் முன்** கரகோஷமும், சந்தோஷமும் எழும்பும்!

எனவே அன்பான சகோதரனே ! சகோதரியே !

சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு இன்றுவரை நீங்கள் தளர்ந்திருப்பீர்களானால் பயந்திருப்பீர்களானால் விலகி நின்றிருப்பீர்களானால் இன்றே முழங்கால் படியிடுங்கள்! உங்கள் ஐயங்கள் கூச்சங்களை உள் பயங்களை உடனடியாக **பரிசுத்த ஆவியானவர் நீக்கிப்போடுவார்.** கீழ்த் தட்டின் யோனாவாக இருந்தால் **மேல் வீட்டின் போதுருவாக** உங்களை மாற்றுவார் அந்த கார சக்திகளுக்கு எதிராக போராடும் வீரராக மாறுவீர்கள் ! மெய்யான சீஷராக செல்லும் இடமெல்லாம் சமாதானப் பாத்திரர்களை சம்பாதிப்பீர்கள்! தாழ்மையும் திறமையும் கொண்ட **ஸ்தாபன சபைத் தலைவராக** அப்போஸ்தலர்களாக மாறி உலகையே கலக்குவீர்கள்! உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் சுவிசேஷ முரசு ஒளிக்கும் கிறிஸ்துவை நேசிக்கும் நேசம் உங்களை சதா நெருங்கு ஏவும்! உங்கள் மூலம் இந்தியாவின் ஆறு லட்சத்துக்கும் அதிகமான கிராமங்களில் குறைந்தது ஒரு கிரமத்தில் இந்த வருடமே சுவிசேஷ தீபம் ஏற்றப்படும் ! ஓர் திருச்சபையும் மலர்ந்துவிடும் ஆமென்

சகோ. **எமில் ஜெபசிங்**

விஷ்வவாணி மிஷனரி ஸ்தாபனத்தின் ஸ்தாபகர்

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**


**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# ஈஸ்டர் கொண்டாட்டம்

இந்த கட்டுரை BYM மிஷனரி ஸ்தாபனத்தின் ஸ்தாபகரும் வேதாகம பண்டிதரும், பைபிள் டீச்சருமான முன்னாள் CMC Hospital இன்ஜினியருமான **சகோ. R. ஸ்டேன்லி** அவர்கள் எழுதியதாகும்.



கிறிஸ்துமஸைவிட **ஈஸ்டரைப்பற்றியே** பைபிள் அதிகம் பேசுகிறது. நற்செய்தி நூல்களிலும் மத்தேயுவும், லூக்காவும் **கிறிஸ்து பிறப்பின் சரிதையைத்** தருகின்றன. அவரது இறப்பும் உயிர்ப்புமோ அனைத்துச் சுவிஷேங்களிலும் விவரிக்கபட்டுள்ளன. நிரூபங்களில் அதற்குப் போதுமான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டில் **உயிர்தெழுதல்** ஏறத்தாழ 40 தடவை குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் ஓர் அற்புதம்தான் **ஈஸ்டரே அதைவிடப் பெரிய அற்புதம்.** பெத்தகேமின் தொழுவம் அல்ல. **கிறிஸ்துவின் காலிக் கல்லறையே திருச்சபையின் தொட்டில்** எனலாம். எந்த மனிதனுடைய வாழ்வும் **அடக்க ஆராதனையுடன்** முடிவடையும். கிறிஸ்துவின் பூவுலக வாழ்வோ ஒரு பண்டிகையுடன் முடிவடைகிறது. உயிருடன் இருந்து செத்துப்போன ஒருவரை அல்ல. **செத்தும் உயிருடன் இருக்கும்** ஒருவரையே நாம் விசுவாசிக்கிறோம்,. வெளிப்படுத்தல் புத்தகத்தில் உள்ள ஏழு சபைகளுக்கு இயேசு தம்மை எவ்விதம் அறிமுகம் செய்கிறார் பாருங்கள். வெளி 1:18 **இறந்தேன்** ஆனால் **இதோ என்றென்றும் உயிரோடு இருக்கிறேன்.**

கிறிஸ்தவமே ஓர் உயிர்தெழுதலின் மார்க்கம் தான். கிறிஸ்து **உயிர்ந்தெழுந்திராவிடில்** நமது பிரசங்கமும் வீன் நமது விசுவாசமும் வீன் 1 கொரி 15:16.. ஆம் இயேசு கிறிஸ்துவின் **உயிர்தெழுந்தலே** புதிய ஏற்பாட்டின் மையப்பொருள் எனும் முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. இந்த மையத்துவத்தை மறந்து நம் அளவுக்குமீறி **கிறிஸ்துமஸ்** கொண்டாடிவிட்டு ஏதோ ஒரு நாளில் ஆராதனையோடு **ஈஸ்டரை முடித்துவிடுகிறோம்.** இன்றைய கிறிஸ்தவம் இவ்வாறு

சோகைபிடித்து பலங்குன்றி இருப்பதற்கு இதுவே காரணம் . கிறிஸ்தவ வாழ்வுக்கும் பணிக்கும் அச்சானி போன்றதை குறைத்து மதிப்பிட்டு விட்டோம். கிறிஸ்துவின் **உயிர்தெழுதல்** இல்லையேல் **கிறிஸ்தவம் ஏது?** பைபிளுக்கு புறம்பான பல பாரம் பரியல்கள் நமது ஆன்மீக பாதையை மங்கச் செய்துள்ளன. இயேசு தமது பூவுலக வாழ்வின் **இறுதியில் அல்ல** ஊழியக் காலத்தில் **தொடக்கத்தில் தான்** 40 நாட்கள் உபவாசித்தார். மத் (4:1,2,17) அதை பெரிய வெள்ளிக்கான 40 நாள் ஆயத்தம் என்பது மனிதரது **அறிமுகம்** தான்.

சபையினருக்கு தெளிவான போதனைகள் கொடுக்காமல் **தலைவர்கள்** குருடர்களுக்கு வழிகாட்டும் குருடர்களாகிவிட்டனர். (மத் 15:14, 23:16அ, 17அ, 19அ, 24அ, 26அ) நமது நம்பிக்கையிலும் நடத்தையிலும் **உயிர்த்தெழுதல் எனும் சத்தியத்தை** அது இருக்கவேண்டிய இடத்துக்கு திரும்பி கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**வசந்த காலம்** அல்லது **விடியற்காலம்** எனப் பொருள்படும் புராதன ஆங்கிப் பதம் ஒன்றிலிருந்துான் **ஈஸ்டர்** (Easter) எனும் சொல் வந்திருப்பதாய்க் கருதப்படுகிறது. நமக்கு விடியலை தரும் **உதய சூரியன் தோன்றுவது கிழக்கு** (East) என்பதிலிருந்து இருந்தும் இவ்வார்த்தை வந்திருக்கலாம் என்பது இலக்கியத்தார் கருத்து. பல வர்ணம் பூசப்பட்ட முட்டைகளை Easter Eggs என்று மேற்கு ஐரோப்பியாவில் கிறிஸ்மஸ் கேக்குகள் போன்று அன்பளிப்பது புது வாழ்வினை குறிக்கிறது. **காலி முட்டையோட்டை விட்டுவிட்டு** உயிருள்ள ஒரு குஞ்சு வெளிவருகிறதாம். **ஒரு அந்நிய தேவதையின் பெயரிலிருந்தும்** ஈஸ்டர் எனும் **சொல்** வந்திருக்கலாம் என்பது எண்ணம். இருக்கலாம்! **இது விவாதத்துக்குரியது**. எது எப்படி இருந்தாலும் **ரோஜா மலருக்கு** என்ன பெயர் வைத்தாலும் **அதன் மனம் ஒன்றுதானே!** King James Version என்ற ஆங்கில வேதாகமத்தில் மட்டுமே ஒரேயொரு தடவை (Easter) எனும் பதம் பயன்டுபத்தப்பட்டுள்ளது. (அப் 12:4) இது பஸ்கா பண்டிகையை குறிக்கும் நவீன மொழியாக்கங்களிலும் இந்த வசனம் பஸ்கா என்றே தரப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் முதல் வருகையின் தொடக்கம் **கிறிஸ்துமஸ்** அவரது மறு வருகைக்கான உத்திரவாதமே **ஈஸ்டர்.** அப். 1:11, உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் **எப்படி எழுந்தருளிப்போனாரோ** அப்படியே **மறுபடியும் வருவார்.** இயேசுவானவர் பரமேறியபோது வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த சீடருக்கு வெண்ணுடை அணிந்திருந்த இருவர் சொன்ன வார்த்தைகளே இவை. (வசனம் 10) இயேசு கிறிஸ்து எவ்விதம் **தாவீதின் வம்சத்தில் பிறந்தார்** என்பதை நமக்கு **கிறிஸ்துமஸ்**

தெரிவிக்கிறது, **அவர் எவ்விதம் தேவக் குமாரன்** என்று நிரூபிக்கப்பட்டார் என்பதை **ஈஸ்டர்** நமக்கு போதிக்கிறது (ரோ. 1:4,5)

அவர் **ஆண்டவரும்** கிறிஸ்துவுமானவர் என்று **அறிவிக்கப்படுவதற்கு** ஆதாரம் அவரது **சரீர உயிர்தெழுதலே** (அப். 2:32, 36) உயிர்தெழுதலே அவரை அல்பாவும் ஓம்மொகாவுமானவர் என்றாக்கிற்று (வெளி 1:8,11,17) இயேசுவை இறைமகன் என முன்னிருத்தும் யோவான் தனது சுவிசேஷத்தில் அவரது உயிர்தெழுதலை விவரிக்க இரு முழு அத்தியாயங்களை ஒதுக்கி உள்ளார்.

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் உயிர்ப்பை குறித்த முன்னறிவிப்புகள் வெளிப்படையாக இல்லாவிடினும் மறைமுகமாக பல இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. **ஈசாக்கை ஆபிரகாம் பலியிட எடுத்து சென்றதே முதல் அடையாளமாகும்.** (ஆதி 22:5) எபிரெய நிரூப ஆக்கியோன் **அதற்குக் கொடுக்கும் வியாக்கியானம்** எபி. 11:17-19 **ஆபிரகாம்** சோதிக்கப்பட்டபோது **விசுவாசத்தினால்** ஈசாக்கை **பலியாக** ஒப்புக்கொடுத்தார் ஈசாக்கிடம் **உனது சந்ததி விளங்கும்** என அவரிடம் சொல்லப்பட்டிருந்ததே, இவ்வித k VÂz ï ç á ØÃu Åk ì **மரித்தோரிலிருந்து** ***எழுப்ப*** **தேவன் வல்லவராய்** இருக்கிறார் என்று எண்ணி தனது ஒரே போரானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தார். மரித்தோரிலிருந்து அவனை **பாவனையாகத் திரும்ப** பெற்றுக்கொண்டார். அடுத்து இயேசுவை குறித்த தாவீதின் வார்த்தைகள் சங். 16:8-11 என் **ஆத்துமாவை பாதாளத்தில் விட்டுவிட மாட்டீர்.** அறிவை காண **உமது பரிசுத்தரை விடமாட்டீர்.** (அப் 2:25-28) இதோ ஏசாயா 53:11 அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனை கண்டு திருப்தியாவார்.

அடுத்து வருவது தீர்க்கன் **ஓசியா** ஓசி 6:2 இரு நாட்களுக்கு பின்னர் அவர் நம்மை உயிர்ப்பிப்பார் **மூன்றாம் நாளில் நம்மை** எழுப்புவார். அப்பொழும் நாம் அவரது சமூகத்தில் பிழைத்திருப்போம். மீன் வயிற்றில் யோனா மூன்று நாட்கள் இருந்ததை இயேசுவே **மூன்று நாட்கள்** தாம் கல்லரையில் இருக்க போவதாற்கு ஒப்பிட்டார். (யோனா 1:17, 2:1 மத், 12:40)

பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை நன்கு தெரிந்து வைத்திருந்த ஆண்டவர் எம்மாவூர் சீடருக்கு விளக்கியது. எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாள் மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிற்று. (லூக் 24:46) தமது உயிர் நீத்தலையும், உயிர்த்தலையும் இயேசுவானவரே முன்னறிவித்தலையும் தீர்க்கதரிசனமே

(மாற் 10:32-34 லூக் 18:31-34) **உயிர்தெழுதலை** மனதில் வைத்தே தேவன் இறந்தோரின் தேவனாயிராமல் **உயிருள்ளலோரின் தேவனாய்** இருக்கிறார் என்றார் இயேசு. (மாற் 12:27), அபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் பெயரை அவர் இங்கு குறிப்பிட்டது ஏனென்றால் அந்த முற்பிதாக்கள் மரித்து மறைந்துவிடவில்லை. உயிருடன்தான் இருக்கிறார்கள். அப்பொழுதுதான் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அவர்களுடன் விண்ணரசில் விருந்துண்ண முடியும் என்பது சுட்டிக்காட்டவே (மத் 8:11)

முகவுரையாக இவ்வளவு காரியங்களை கூறிவிட்ட பின்னர். உயிர்த்தெழுதல் என்ற பாடத்தை இரு உப தலைப்புகளின் கீழ் படிப்போம்

(A) அப்பியாசிப்பு (Appropriation)

(B) அறிவிப்பு (Annunciation)

## (A) அப்பியாசிப்பு

இயேசு கிறிஸ்துவின் சரித்திரபூர்வமான **உயிர்தெழுதலின் பலன்களை** தமது நடைமுறை வாழ்வில் **எவ்விதம் அப்பியாசிப்பது** என்பதைப் போதிப்பதே புதிய ஏற்பாட்டு **நிருபங்களின் நோக்கம்.** இயேசுவின் பூவுலக வாழ்வின்போது பேதுரு, யோவான் போல அவருடன் ந**டந்து வராதிருந்தும்** பவுலடியாரே மிக அதிகமான ஆலோசனைகளை **உபதேசித்துள்ளார்.** அவருக்கு கிடைத்ததும் கிறிஸ்துவின் **கடைசி தரிசனம்** மட்டுமே (1கொரி 15:8) தமது சுத்தக் கிருபையினால் தேவனே தெரிந்தெடுப்பதற்கு இது நிகரற்ற சாட்சி அன்றோ? (வச 9,10) **பவுலுக்கு கிடைத்த** வெளிப்பாடுகள் மேன்மையானவையே என்பதை மறுப்பதற்கு இடமில்லை. (2 கொரி 12:7)

**மனந்திரும்புதலை** அடுத்து **தண்ணீர் திருமுழுக்கைக்** குறித்ததே முதல் நடைமுறைப் பாடம், ரோ, 6:4, பிதாவின் மகிமையினால் **கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல** நாமும் புத்துயிர் உள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி அவரது **மரணத்திற்குள்ளாக்குப் ஞானஸ்நானத்தினால்** கிறிஸ்துவுடன் **அடக்கம் பண்ணப்பட்டுள் ளோம்.** இனி நாம் பாவத்திற்குச் சேவை செய்யும் அடிமைகளாகிவிடக்கூடாது (வச. 6) **ஞானஸ்நானத்தை** வெறும் **சடங்கு** என்று நினைத்துவிடக்கூடாது. அது இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட்ட நல் **மனசாட்சியின்**

**உடன்படிக்கையாம்.** அது அவரது உயிர்தெழுதலினால் நமக்குக் கிட்டுவது (1பேது 3:21, எபி. 9:14) **முழுக்கு** ஞானஸ்நானத்தைச் **சாதாரணமாய்** எண்ணி விடக்கூடாது. ஏனெனில் **வேறெந்த செயல்முறையும்** கிறிஸ்துவின் **மரணம், அடக்கம், உயிர்தெழுதல்** ஆகியவற்றில் அவருடன் அடையாளப்படுத்திக்கொள்ள நமக்கு இவ்வளவு ஏதுவுண்டாக்குவதில்லை. (ரோ. 6:3,4, கொலோ 2:12) ஏதொவொரு காரணம் சொல்லித் **திருமுழுக்கினை நீண்ட காலம் ஒத்திப்போட்டவர்கள்.** அதில் கீழ்படிந்ததும் சொல்லும் சாட்சிகள். **இத்தனை காலம் அவர்கள் தாமதித்ததால்** இழந்த ஆசிகளை உறுதி செய்கின்றன.

பாவத்திற்கு மரித்து நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறோம். என்று எண்ணி வாழ்வதே பாவத்தின்மீது வெற்றிபெற ஒரே வழி (ரோ. 6:11) இதன் பொருள் என்னவெனில் முன்னர் நமது உடலுறுப்புகளை அசுத்த செயல்களில் ஈடுபட விட்டுவிட்டதுபோல. இப்பொழுது அவற்றை நீதியும் புனிதமுமாக வாழ்ந்திட அர்ப்பணிப்பதாகும். (வச. 19, ரோ, 12:1) ஏதோ கிடைக்கலாம் என்ற வெற்றியை நோக்கி அல்ல. ஏற்கனவே கிறிஸ்துவின் உயிர்தெழுதலால் கிடைத்துவிட்ட வெற்றியிலிருந்து தொடங்குவதே கிறிஸ்தவ வெற்றி வாழ்வு என்பது அப்பொழுதுதான் நமக்குப் புரியும். (கொலோ 2:15, 1 யோ. 5:4,5) **பாவ சுபாவம்** நம்மிலிருந்து **வேரறுக்கப்படவில்லை**, மாறாக **நாம்தான் அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம்.** அதனை அப்படியே எண்ணிக்கொள்ளவேண்டும். (ரோ. 7:20, 6:11,14, 8:12) Not eradiction but ernancipation இது பழைய மனிதனைப் புறந்தள்ளுதல் அல்ல, மாறாக புதிய மனிதனைப் Am©¸ ÝmÂØï Võ ¼Ä I ò Ý>é VD. (2 Øï Võ 4 :16 , ¼«V. 12 :2 ) **Not removal** of the old man, but **renewal** of the new man குற்ற உணர்வு தொலையும். குதூகலம் தொடங்கும் ! கிறிஸ்து உயிர்த்துவிட்டதால் நாம் இனிப் பாவத்திற்கு அடிமைகள் அல்ல (1 கொரி 15:17ஆ) அவர் பிதாவானவரிடமிருந்து தீர்க்கதரிசியாய் வந்தார். (எபி. 1:1,2) அவரிடம் ஆச்சாரியராய்த் திரும்பிச் சென்றுள்ளார். (7:24, 8:1) இராஜாவாய் திரும்ப வருவார் (வெளி 19:16) அவரைச் சேவிக்கும்படி **நம்மையும் அவர் தீர்க்கதரிசிகளாகவும், ஆச்சாரியர்களாகவும்**, **இராஜாக்களாகவும்** ஆக்கியுள்ளார். (அப். 2:16-18, 1 பேது 2:4,5,9,10)

பாவங்களிலெல்லாம் பாவம் **அவிசுவாசமே**, அதற்கு அடுத்து பொருளாசையே, பண ஆசையே எல்லாத் தீங்கிற்கும் வேராயிருக்கிறது. (1 தீமோ 6:10) கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார் என்றும். நாமும் புது வாழ்வுக்காக அவருடன் எழுப்பப்பட்டிருகிறோம் என்றும் விசுவாசித்தால் பொருளாசைக்கு நாம் அடிமைகளாகவே மாட்டோம். கொலோ 3:1-3. நீங்கள் கிறிஸ்துவுடன் எழுந்தது உண்டானால், கிறிஸ்து தேவனது வலது பக்கத்தில் அமர்ந்திருக்கும்

இடத்திலுள்ள மேலானவற்றைத் தேடுங்கள். **பூவுலகில் உள்ளவற்றையல்ல,** விண்ணுலகில் **உள்ளவற்றையே** நாடுங்கள். ஏனெனில் நீங்கள் செத்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கிறது. ஒரு பிரேத்தின்மீது மலர் தூவுவதே இங்கு சித்திரம், அது செத்தவனுக்கு என்ன செய்யும் ? பொருளாசை என்றால் என்ன ? அது இவ்வுலக ஆசிகளுக்காக மட்டும் கிறிஸ்துமீது நம்பிக்கை வைப்பதாம். உயிர்தெழுதலைக் குறித்த தனது மிக நீண்ட அத்தியாயமாகிய 1கொரிந்தியர் 15ல் பவுலின் துணிச்சலான வார்த்தைகளைத் கவனியுங்கள். இவ்வுலக வாழ்வுக்காக மட்டும் நாம் கிறிஸ்துமீது **விசுவாசம்** வைத்திருந்தால். நாம்தான் மனிதரெல்லாரிலும் பரிதாபத்திற்குரியோர் (வச. 19) சாப்படுவோம் சாவோம், என்று மிருங்கள் போல் வாழ்வதே அது. (வச. 32) பூவுலகச் சிந்தனைகளுக்கு எதிராக, விண்ணகச் சிந்தையைக் கூட்டிக்கொண்டே இருப்பதுதான் உண்மையான ஈஸ்டர் கொண்டாட்டம் ! தான தர்மத்தில் தயாராயிருப்பது நமது உயிர்த்தெழுதலின்போது நமக்குத் திரளாய்ப் பலன் சேர்க்கும். (லூக் 14:12-14)

ஆன்மீக ஆரோக்கியத்திற்கு மேலாக சரீர சுகத்தை வலியுறுத்துவோருக்கு இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு ஆகிய இரண்டும் இன்னும் சரிவரப் புரியவில்லை என்றே சொல்லவேண்டும். சிலுவையில் கிறிஸ்து நமது பாவங்களைச் சுமந்து தீர்த்துவிட்டார். நம்மில் இன்று பாவம் இல்லையோ? (1 யோ. 1:8) அப்படியே சிலுவையில் கிறிஸ்து நமது நோய்களைச் சுமந்துவிட்டார். நூறு சதவீதம் உடற் சுகம் உள்ளவர் யாரோ ? அவனுக்கு ஒரு பருவாவது அல்லது தோல் சுருக்கமாவது இருக்கும்! கிறிஸ்து திரும்ப வரும்போதுதான் அற்பமான நமது சரீரத்தை உயிர்த்தெழுந்த அவரது சரீரத்தைப்போல் அவர் மாற்றுவார். (பிலி. 3:20,21) அதுவரை வியாதியும் வேதனையும் கண்ணீரும் இருக்கத்தான் செய்யும். இதற்கு எதிராய் பிரசங்கிக்கும் எவரும் தனது மனதை இப்பாலுலகிலேயே பறித்து வாழ்வார். இப்படிபட்டவர்கள் கிறிஸ்துவின் **சிலுவைக்கு எதிரி**. (வச. 18,19)

வாழ்க்கை என்பது **பிறப்பிலிருந்து இறப்பு** நோக்கிய **பயனமே,** நமது உடல் அதிவிரைவாக அழிந்து விடாதபடி இயேசுவை உயிர்ப்பித்தவரும் நம்மில் வாழ்பவருமான ஆவியானவர் அதற்கு உயிரோட்டம் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். (ரோ. 8:11) முடிவானதும் முழுமையானதுமான உடற்சுகம் நமக்கு நமது உயிர்தெழுதலின் போதுதான் கிடைக்கும். இப்பொழுதும் அதன் முதற்கனிகளையே ருசிக்கிறோம். நமது சரீர மீட்பு உயிர்தெழுதலின்போதுதான் நிறைவடையும். (வச. 23, பிலி 3:20,21) நமது இன்றைய பாடுகளினால் நமது புறம்பான மனிதன் அழிந்துகொண்டே இருந்தாலும். நமது உள்ளான

மனிதன் புதுபிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறான். (2 கொரி 4:16) நமது உடலை இவ்வுலகத்திற்குரிய வீடு என்றும் அது தற்காலிகமான ஒரு கூடாரம் என்றும் அதற்குள்ளிருந்து நாம் தவிக்கிறோம் என்றும் எழுதும் அப்போஸ்தலன் பவுல், கைகளால் கட்டப்படாத நித்திய வீடு நமக்கு பரலோகில் உண்டென உறுதிபடக் கூறுகிறார் (2கொரி 5:1-3). ஆம் இன்று பார்க்க முடிகிற தற்காலிகமானவற்றில் அல்ல பார்க்க முடியாத நித்திய காரியங்களிலேயே நமது கண்களை நாம் பதிக்க வேண்டும். அளவுக்குமீறி நமது திறனுக்கு மிஞ்சி நாம் அழுத்தப்பட்டு பிழைப்போமோ என்ற கேள்வியும் எழும் வேளையில் நாம் நம்மீது அல்ல இறந்தோரையும் எழுப்பிவிடும் தேவன் மீதே நமது விசுவாசத்தைப் பதித்துவிட வேண்டும் (2 கொரி 1:8-10). கிறிஸ்துவின் மறுவருகையின்போது நாம் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையே நமக்கு இணையற்ற ஆறுதல் தரும் (1 தெச 4:14,18).

தமது உயிர்த்தெழுதலினால் இயேசுவானவர் ஆளுநர்கள் அதிகாரிகள் ஆகியோரது படைக்கலன்களைப் பிடுங்கிக்கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாய் அவர்களை இழுத்துச்சென்றார். (கொலோ 2:15). நியாயப்பிரமாணயத்தின் சாபத்திலிருந்தும் கட்டிலிருந்தும் விடுதலை என்பதே இவ்வசனப் பகுதியில் பேசப்படும் பொருள் (வச 16, கலா 3:13). பிற கட்டுகளையும் இங்கு வரிசைப்படுத்த விரும்புகிறேன். கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டால் **மாம்சீகச்** சிறையிலிருந்து (Carnalism) விடுதலை (1 கொரி 15:17), **பொருளாசைச்** சிறையிலிருந்து (Materialism) விடுதலை (கொலோ 3:1-3,5: 1 கொரி 15:19,20). **சடங்காச்சாரச்** சிறையிலிருந்து (Ritualism) விடுதலை (எபி 6:1,4:14-16), **பிரமாணச்** சிறையிலிருந்து (Legalism) விடுதலை (ரோ 7:5, 10:4, பிலி, 3:4, ரோ 14:1-10) **தோல்விச்** சிறையிலிருந்து (Defeatism) (1 கொரி 15:55,57: எபே 4:8-12), **பிரிவினைச்** சிறையிலிருந்து (Factionalism)விடுதலை (எபே 2:14,16:கொலோ 3:11) மற்றும் பா**தக நோக்குச்** சிறையிலிருந்து (Pessimism) விடுதலை (வெளி 1:17-19) ஆகியவை நமக்குக் கிடைத்துவிட்டன. **இனி சிறை கிடையாது.** சிறகடித்துப் பறந்திடுவோம். இவற்றில் சில ஏற்கனவே முந்தைய பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன. நமது ஆன்மிகக் கண்கள் பிரகாசமாக்கப்படாவிடில் இப்பல்வகை விடுதலையை நாம் விளங்கிக்கொள்ள முடியாது. எபேசு விசுவாசிகளுக்காய்ப் பவுலடியார் ஏறெடுத்த ஜெபம் எபே 1:19,20. கிறிஸ்துவைத் தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பி அவரிடம் நடப்பித்த தமது பலத்த மகத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கும் நம்மிடம் காண்பிக்கும் தமது வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று நீங்கள் அறியும்படி அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்கள் கொடுக்கவேண்டுமென வேண்டுகிறேன்.

இயேசுவின் **உயிர்த்தெழுதல்** நம்மை அவருடன் இன்னும் நெருக்கவுறவு கொள்ளச் செய்துள்ளது. **தொடக்கத்தில்** அவர் தமது சீடரை அவரது **ஊழியக்காரர்** என்றழைத்தார் பின்னர் **அவர்களைத் தமது நண்பர்** என்றழைக்கலானார் (யோ 15:15). உயிர்த்தெழுதலுக்குப் பின்னரே அவர்களைத் **தமது சகோதரர்** என்றழைக்கத் தொடங்கிவிட்டார் (யோ 20:17). நம்மை அவ்விதம் அழைத்திட அவர் வெட்கப்படவில்லையாம் (எபி 2:11). முடிவாக நாம் அவருக்கு **மணமகள்** என்றே ஆகிவிடுகிறோம் (ரோ 7:4). நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து எனும் ஒரே கணவனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்துவிட்டேன் என்று பவுல் கூறுவது என்னே சுவாரஸ்யம் (2 கொரி 11:2, எபே 5:25-27). மரித்தோரியிருந்து எழுப்பபட்ட அவருக்கு மணமுடிக்கப்படவிருக்கிறோமாம். (ரோ 7:4). தலை சுற்றுகிறதா? ஈஸ்டருக்காய் அல்லேலூயா போடுவோம்.

## (B) அறிவிப்பு

இயேசுவைப் பொருத்தவரை, அவரது **இறப்பு** மற்றும் **உயிர்ப்பிலேயே சுவிசேஷம்** தொடங்குகிறது. உயிர்தெழுந்த பின்னர் இதோ அவரே கூறியது. லூக் 24:46,47 எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. மட்டுமல்ல **மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும்** எருசலேம் தொடங்கி, அனைத்து நாட்டினருக்கும் அவரது **நாமத்தினால்** பிரசங்கிக்கப்படவும் வேண்டும். இயேசுவின் செய்தியை அப்படியே காப்பியடித்துப் பவுல் நமக்குச் சுவிசேஷத்தை வரையறுத்துள்ளார். 1 கொரி 15:1-5 நான் பெற்றுக்கொண்டதும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி **நமது பாவங்களுக்காய்** மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி **மூன்றாம் நாளில் உயிர்தெழுந்தார்.** இதைச்சொல்லாத சுவிசேஷப் பிரசங்கங்கள் **ஒரு காசும் பெறாது.** விதையாக அதனை ஊன்றிடாது நாம் அறுவடை எதிர்ப்பார்ப்பது எப்படியோ? அறிவார்ந்த முத்துக்களையே பிரங்கபீடங்கள் பல அள்ளி வீசுகின்றன. முத்துக்களையே நிலத்தில் விதைத்தால் என்ன கிடைக்கும்? சிந்தித்துப்பாருங்கள் ஒன்றும் நடக்காது ! அது கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக மாணவராயிருக்கட்டும், அல்லது காங்கோ நாட்டுப் பழங்குடியினரா யிருக்கட்டும். எவரக்கொன்றாலும் கிறிஸ்துவின் **இறப்பு** மற்றும் **உயிர்ப்பை** மையமாக்க கொண்ட **எளிய சுவிசேஷத்தையே** நெடுங்காலம் பிரசங்கித்து வந்ததாலேயே **பண்டிதர் பில்லி கிரஹாமின்** ஊழியம் நெடுகவே **வெற்றி கண்டது!**

உலகம் அதிலும் இந்தியா, எத்தனையோ அவதாரங்களைக் கண்டுள்ளது. அவர்களெல்லாரும் வந்தார்கள், இறந்தார்கள், அவ்வளவுதான், இதோ அவர்களைக் குறித்த ஒரு விவிலியக் குறிப்பு, ஏசா 26:13,14 எங்கள் தேவனாகிய கர்த்தாவே உம்மையல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள். அவர்கள் செத்துவிட்டார்கள் , எழுந்திருக்கமாட்டார்கள் ஆனால் சரித்திரமெங்கிலும் கிறிஸ்து மட்டுமே கடவுளாய் மனுவுடலெடுத்து நமது பாவங்களுக்காய் உயிர் கொடுத்து உயிரோடு எழுந்து என்றென்றும் வாழ்கிறார் ! ஒரு கவிதை வடியில் இம்மாபெரும் இரகசியம் 1 தீமோத்தேயு 3:16ல் தரப்பட்டுள்ளது. இறைவன் மனுவுடலில் வெளிப்பட்டார். ஆவியில் நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். தேவ தூதர்களால் காணப்பட்டார். புறவினத்தாரிடம் பிரசங்கிக்கப்பட்டார். உலகில் விசுவாசிகப்பட்டார். மகிமையில் மெலேடுத்துக்கொள்ளப்பட்டார். எவராவது இந்த இயேசுவுக்கு நிகராய்க் கிட்ட வரமுடியுமா ? நமது சுவிசேஷப் பிரசங்கங்களில் யோவான் 14:6ஐ மேற்கோள் காட்டுவோம். **நானே வழியாய்** இருக்கிறேன். என்றார் இயேசு ! நான் **உயிர்தெழுதாலாய்** இருக்கிறேன். என்றும் அவர் உரிமை பாராட்டியுள்ளதை அறிவோமா? (11:25) என்னை விசுவாசிக்கிறவன் **இறந்தாலும் உயிர் வாழ்வான்** என்றும் கூட்டிச்சொன்னார், ஆம் அவரே ஜீவாதிபதி (அப். 3:15)

Good Tidings அல்லது Glad tidings எனும் சொற்கள் ஆங்கிலப் புதிய ஏற்பாட்டில் இரு இடங்களில் மட்டும் வருகின்றன. ஒன்று அவரது பிறப்பை அடுத்தது, மற்றொன்று அவரது உயிர்ப்பை அடுத்தது (லூக் 2:10, அப். 13:32) உலகம் முழுவதுமே துர்ச் செய்திகளாலும் துக்கச் செய்திகளினாலுமே நிறைந்திருக்கிறது. செய்திதாள்களை வாசித்தாலும், தொலைகாட்சி செய்திகளைக் கேட்டாலும் மிஞ்சுவது மனத்தொய்வுதான். நமது செய்தி மட்டுமே மனமகிழ்ச்சியானது. எனவேதான் இதை அறிவிப்போரது பாதங்கள் அழகானவை எனப்படுகின்றன (ஏசா 53:7, ரோ 10:15) அவர்களது செய்தி சமாதானம் என்பதே (நாகூம் 1:15ஐயும் பார்க்கவும்) ஆம் சமாதானத்தின் சுவிசேஷமே நமது செய்தி (எபே 6:15) உயிர்த்தெழுந்த கர்த்தர் அடிக்கடி கூறிய வாழ்த்து **சமாதானம் உண்டாகட்டும்** என்பதே (Shalom) (லூக் 24:36, யோ. 20:19,26) நமது வீடுகளை நிறைத்திருப்பது பொருட்கள், பொருட்கள், பொருட்கள் நிறைய சம்பளம், **நவீன சாதனங்கள் விலையுயர் ஆடைகள் , ஏராளம் சாப்பாட்டு வகைகள்** முதலியன, ஆனால் **சமாதானம் எங்கே?** குடும்பங்களில் இதுபோன்றுதான் இல்லாதிருக்கும் என்பதை அறிந்தே நமதாண்டவர் தமது சீடரைச் சமுதாயத்திற்குள் அனுப்பிவைக்கும்போது எந்த **வீட்டிற்குள் நுழைந்தாலும்** உள்ளிருப்போர் தகுதியுள்ளோரோ இல்லாததோரோ **சமாதானம்** கூறுங்கள் என்றார்.

(மத்10:12,13, லூக் 10:5,6) மரண பயம் இல்லாத எவரும் இல்லை. இயேசுவின் உயிர்தெழுதலே மரண பயத்திற்குச் சாவு மணி அடித்துள்ளது. (எபி .2:14,15, 1 கொரி 15:56) எந்த நோயாளியையும் **எந்த மருத்துவம் மரண பயத்திலிருந்து விடுவித்திட முடியாது**. எந்த மருந்துமல்ல நமது **செய்தி ஒன்றே** நிவாரணம் !

**இயேசுவானவரின் உயிர்தெழுதலே** அப்போஸ்தலரது செய்தியின் மையமாயிருந்தது பெந்தேகோஸ்தே நாளின் நிகழ்வுகளைப் பார்த்து நின்றோரிடம் பேதுரு முழங்கியது இதுவே (அப், 2:32) அடுத்து மார்க்கத்தலைவர்களிடம் (4:10, 5:30,31) உயிர்த்தெழுதலின் செய்தியையே அப்போஸ்தலர் முதன்மையாய் வைத்திருந்ததாலேயே அவர்களுக்கு மிகுந்த வல்லமையும் மிகுந்த கிருபையும் இருந்தன (4:33) **சிலுவைச் செய்தியின்** முலமாகவே **எத்தியோப்பிய நிதி மந்திரி** உடனடி இரட்சிப்படைந்தார். ( 8:32, 33) இத்தாலிய இராணுவ அதிகாரி கொர்நேலியுவின் குடும்பத்தாருக்குப் போதுரு பிரசங்கித்துக்கொண்டிருக்கும் போதே **பரிசுத் ஆவியானவர்** அவர்கள் மிது இறங்கினார். ஏனெனில் அவர் சிலுவை மரத்தையும் உயிர்தெழுதலையும் குறித்தே பேசினார். (10:39,40,44) அடுத்து ஜெபாலயங்களோ, சந்தை வெளிகளோ, **ஆளுநர் பேலிக்ஸ்** முன்பாகவோ **அகிரிப்பா இராஜா** முன்னரோ உயிர்தெழுதலின் செய்தி யோடேயே நின்ற பவுலைச் சந்திக்கிறோம். (17:2-3, 17-18,32 24:21, 26:8,23) அனைத்து நாட்டினருக்கும் இனத்தினருக்கும் உயிர்த்தெழுதலின் செய்தியை அறிவிக்க தனது அர்ப்பணிப்பை அகிரிப்பா முன்னிலையில் இவ்விதம் பவுல் குறிப்பிட்டார். இளைஞர் மற்றும் முதியோர் யூதர் மற்றும் புறவினத்தார் யாவருக்கும் மட்டுமல்ல, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் தவிர வேறொன்றையும் அவர் பறை சாற்றவில்லை. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் தவிர வேறொன்றையும் அவர் பறை சாற்றவில்லை என்றும் உறுதியாக் கூறினார். (26:22,23)

சுகம், செல்வம் ஆகிய ஆசிகளை வழங்கும் இன்ப இயேசுவைப்பற்றிய பேசும்வரை தங்களுக்கு ஏற்கனவே ஏராளம் தேவர்கள். தேவதைகள் வரிசையில் அவரையும் சேர்த்துக்கொள்வதில் இந்தியருக்குப் பிரச்சனையே இல்லை. கொல்கொதா மலை வரை வருவதற்கு நமது நாட்டினர் தயங்கமாட்டார். காலிக் கல்லறைதான் அவர்களுக்குப் பிரச்சனை ! நமக்கோ வேறு செய்தியே இல்லையே ! கிறிஸ்து உயிர்தெழுந்திராவிடில் நாம் பிரசங்கித்து பயன்னென்ன? (1 கொரி 15:14) பாவ மன்னிப்பிற்காகக் கிறிஸ்துவின் இணையற்ற பரியே கிறிஸ்தவச் செய்தியைத் தனித்தோங்கி நிற்கச் செய்கிறது ! உங்கள் நற்செய்தியறிவிப்பு பணியில் மனிதருக்குப் பயந்து சத்தியத்தை அடக்கிவைத்திவிடாதீர் (ரோ. 1:18, நீதி 29:25)

கிறிஸ்துவின் உயிர்தெழுதலைக் குறித்த சந்தேகமற்ற நிச்சயமே சீடரது **சிங்கத்** துணிச்சலுக்குப் பிரதான காரணம் (அப். 4:13, 6:10) பேதுரு போன்றதொரு கோழைத்தன சீடனின் முழு மாற்றம் விந்தை! தனது நிரூபங்களில் அவர் எவ்விதம் வெளிப்படுத்துகிறார் பாருங்கள். கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகர தைரியம் (1 பேது 2:9,3:15) விசுவாசத் துரோகிகளை எதிர்க்க தைரியம் (2 பேது 2:1-3. 3:3, 4,16) மற்றும் சோதனைகளையும் வேதனைகளையும் சகிக்க தைரியம் (1 பேது 1:6,7, 2:20,21, 3:14) ஆட்டங்காணும் ஊசலாடும் ஒரு மீனவன் உயுதிபூண்ட அப்போஸ்தலன் ஆனார்! **மணல் துகள்கள்** போலிருந்த ஒரு சீடன் **பாறை** போன்றவன் ஆனார்.

கிறிஸ்துமஸ் பாடல் பவனி (Carols) போவது பல சபைகளில் வழக்கமாயிருக்கிறது. அப்படியே ஈஸ்டர் பவனி போனாலென்ன? அது சுவிசேஷம் பரவுவதற்குக் கைகொடுக்குமே! Carol எனும் பதம் **பழைய பிரெஞ்சு** மொழியிலிருந்து வருகிறது. அதன் பொருள் **ஆடலுடன் பாடல்** என்பதாகும். **வட்ட நடனம்** என்றும் அதற்கு ஒரு பொருளுண்டு. இயேசு உயிர்த்தார்! இயேசு வெற்றிச் சிறந்தார்.! இயேசுவின் நாமமே இணையற்ற நாமம்!. இயேசு மன்னாதி மன்னர், கர்த்தாதி கர்த்தார் ! -- இவை போன்ற வாசக அட்டைகளைப் பிடித்துக்கொண்டு தெருக்களில் **பவனி** செல்ல ஒவ்வொரு சபையும் ஒழுங்கு செய்யலாம். தேவையான பகுதிகளில் **காவல் நிலைய அனுமதி** பெற்றுக்கொள்ளுங்கள். மரியாம், தெபொராள் போல **சகோதரிகளே இப்பவனிகளில்** முன்செல்ல நான் அறிவுறுத்துகிறேன் (யாத் 15:20,21: நியா5). அனைவரும் வெண்ணுடை அணிந்து செல்வதும் அழகாயிருக்கும் (வெளி 3:5, 4:4, 7:9,13, 15:6,19:14). **ஓசன்னா** என்று முழங்கிக்கொண்டு பல சபைகள் குருத்தோலை ஞாயிறுப் பவனி செல்கின்றனர். **ஓசன்னா** என்பது **துதி அல்ல** அது **வேண்டல் கர்த்தாவே எங்களை இரட்சியும்** என்பதே **அதன் பொருள்**. ரோமரது கொடுங்கோலாட்சியையே அம்மக்கள் மனதிற்கொண்டிருந்தனர். ஈஸ்டர் பவனியிலோ நீங்கள் **அல்லேலூயா** என்று முழங்கவேண்டும். அதுவே கர்த்தரைத் துதிப்போம் என்று பொருள்படும். கிறிஸ்து எழுந்துவிட்டதால் அல்லேலூயா.!

உயிர்த்தெழுதலைக் குறித்த முதல் சாட்சிகள் **பெண்டிர்தான்** (மத். 28:1-8, மாற் 16:1-8, லூக் 24:1-10, யோ 20:1,11-18). பெண்மணிக்களுக்கே உயிர்த்தெழுந்த ஆண்டவர் முதல் தரிசனம் கொடுத்தது நோக்கமின்றியல்ல. தங்களது பெண்கள் சொல்லுவதற்கு **யூத ஆண்கள்** மதிப்பே கொடுக்கமாட்டார்கள். இவ்விதக் கலாசாரத்தை லூக்கா குறிப்பிடுவதைக்

கவனியுங்கள். லூக் 24:11. அப்பெண்களது வார்த்தைகள் அப்போஸ்தலருக்கு வீண் பேச்சாய்த் (non-sence) தோன்றியதால் அவர்களை இவர்கள் நம்பவில்லை. **உடல் ரீதியாக பெண்கள் பலம் குறைந்தவர்கள்** எனினும் **ஆண்களைவிட அவர்கள் மனப்பலம் அதிகமுள்ளவர்கள்** அவர்களை இரண்டாந்தரக் குடிகளாகத் திருச்சபை பாவித்துள்ளதால் நற்செய்தியறிவிப்பிப் பணியில் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. ஆடவரைவிடப் பெண்டிரே எந்தச் செய்தியையும் விரைவில் பரப்பிவிடுவர். உலகெங்கும் செய்தி வாசிப்போரில் (News Readers) நேர்த்தியானவர்கள் பெண்மணிகள்தான்.

பிதாவாகிய தேவன் தமது மகனை மரணக்கட்டுகளிலிருந்து விடுவித்தார் (அப் 2:24). **ஆலயக் காம்பவுண்டு மனப்பான்மையிலிருந்து நாம்** அவரை விடுவிப்போம். இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து தைரியமாய்ப் பேசிட நீங்கள் வாய் திறக்கும் வரை இறையரசிற்கு நீங்கள் ஒரு **சாவு கிராக்கிதான்**. ஆத்துமாக்களை நீங்கள் ஆண்டவரிடம் கொண்டுவராவிடில் நீங்கள் **சுத்த வேஸ்ட்.** (மத் 12:30, லூக் 11:23). நிலத்தைப் பாழாக்கிக்கொண்டு மழைநீரை வீணாக்கிக்கொண்டு நிற்கும் **கனியற்ற மரங்கள்** எதற்கு? (லூக் 13:7, எபி 6:7,8). முடிவான உயிர்த்தெழுதலில் ஆத்துமாதாயகர் நட்சத்திரங்களாய் ஜொலிப்பர் (தானி 12:2,3). மற்றவர் வெட்கத்திற்கும் இழிவுக்குமே உள்ளாவர்.

கிறிஸ்துவின் மறுவருகையின்போது மரித்த ஒவ்வொரு மனிதனும் உயிருடன் எழுப்பப்படுவான் என்பதையும் உயிர்த்தெழுதலைப் பற்றிய நமது செய்தியானது உள்ளடக்க வேண்டும். (2 தீமோ 4:1, யாக் 5:9). நல்லோர் தீயோர் யாவரும் இதில் அடங்குவர் (யோ5:28,29, அப் 24:15). இந்தியர் பலரது நம்பிக்கையாகிய மறுபிறவி (Cycle of Birth) என்பது இறைவார்த்தையாகிய பைபிளில் இல்லாதது. **ஒரே தடவை இறப்பதும்**, **பின்பு நியாயத்தீர்ப்படைவதும்** மனுதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. என்பதே அதன் போதனை (எபி9:27). நமது இந்தியச் சகோதரர்கள், சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் நாம் விளக்கிச்சொல்ல வேண்டிய இரட்சிப்பின் திட்டம் இதோ ரோ, 10:9,10. கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தாரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசத்தால் நீ இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும். இதுவே நாம் போகமுடியாத இடங்களுக்கெல்லாம் நாமே சென்றும் நம்மால் போகமுடியாத இடங்களுக்குப்

பிறரை அனுப்பிவைத்தும் எங்கும் எவருக்கும் பறைசாற்ற வேண்டிய விசுவாச வார்த்தை ஆகும் (வச 8,14,15). போ அத்துடன் அனுப்பு Go AND Send!.

கிறிஸ்துவின் **உயிர்த்தெழுதலை** நாம் எந்த அளவுக்கு **விசுவாசிக்கிறோமோ** அந்த அளவுக்குத்தான் அதைக் குறித்துப் பேச முடியும். தமது உயிர்த்தெழுதலைக் குறித்துத் தெளிவான நிரூபணங்களால் தமது சீடருக்குக் காட்டிவிடவேண்டும் என்பதற்காகவே ஆண்டவர் தமது பரமேறுதலை 40 நாட்கள் தள்ளிப்போட்டார் (அப் 1: 3,10:40,41). நமது பிரசங்க பீடங்களில் மாலையணிவிக்கப்படும் Rev. Dr. இமெநே மற்றும் Rt.Rev. Dr. பிலேத்து ஆகியோரைக் குறித்து எச்சரிக்கை ! (2தீமா.2:17,18). இவர்களெல்லாரும் **சதுசேயர் கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள்** (மாற் 12:18, லூக் 20:27, அப் 23:8). **அரிபிளவை** போல, அதாவது **புற்றுநோய்** போல இவர்கள் நமது சபையினரை **அமைதியாய்க் கொன்றுவிடுவர்.** இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்து நாம் தீவிரமாய் பேசத் தொடங்கினால் அதிகம் சினங்கொள்வோர் சபைத் தலைவர்களாய்த்தான் இருப்பர் (அப் 4:1,2.மத் 10:17). அடுத்து வருவதுதான் அரசாங்க அதிகாரிகள் (வச 18).அடுத்த வாழ்வைக் குறித்து அதிகம் பேசாத **சுகபோக வாழ்வு உபதேசக்காரரும்** உங்களுக்கு எதிரிகளாவார்கள் (1 கொரி 15:19, பிலி 3:17-19).

உங்கள் தயக்கங்களிலிருந்து வெளிவந்து **தைரியமான** சாட்சியாகிவிடப் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுங்கள் (அப் 1:8, 4:31). பரமேறிய ஆண்டவரது கிருபாவரங்களைப் பயன்படுத்துங்கள் (அப் 2:33,எபே 4:7,8). நான் சரியான கோழை ! வாழ்வின் பிற பகுதிகளில் நான் தைரியமாக செயல்படுகிறேனோ இல்லையோ திருவசனத்தைப் பிரசங்கிக்கத் துணிந்தவன். 1963ஆம் ஆண்டு ஒரு கல்லூரி மாணவனாய் ஒரு சில வாலிபருடன் ஜெபிக்கும்போது நான் பெற்றுக்கொண்ட ஆவியின் நிறைவே அதன் இரகசியம். தயங்கித் தடுமாறும் தீமோத்தேயுவைப் பவுல் எவ்விதம் ஊக்குவித்தார் பாருங்கள். 2 தீமோ 1:7,8, தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியை அல்ல பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். எனவே நமது கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படாதே! உயிர்த்த ஆண்டவர் தமது பரமேற்றத்திற்கு முன்னர் கொடுத்த நற்செய்திப் பேராணை 4 சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளது (மத் 2:18-20, மாற் 16:15-18, லூக் 24:47-49, யோ 20:21-23). மண்ணுலகில் அவரது இறுதி வார்த்தைகள் என எழுதப்பட்டிருப்பது உலகின் கடையெல்லைவரை அவரது சாட்சிகளாய் நாம் பறப்பட்டு செல்லவேண்டும் என்பதே (அப் 1:8,9). நாம் நிசமாகவே அவரை நேசித்தால் இதனைச் சாதாரணமாய் எடுத்துக்கொள்ள முடியுமோ?



## என் அன்றாட ஜெபமும் ஸ்துதியும்

இப்போதும் என் தேவனே !

**இந்த சந்ததிக்கு** உமது வல்லமையையும்

**வரப் போகிற யாவருக்கும்** உமது பராக்கிரமத்தையும்

நான் அறிவிக்குமளவும்

முதிர் வயதும் நரை மயிருமுள்ளவனாகும் வரைக்கும்

என்னை கைவிடாராக .

– ஆமென்

**FEBRUARY 2025**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.